**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 88/2019**

Deposition of **P.W. -1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 04.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : செல்வராஜ் Father Name : கிருஷ்ணமூர்த்தி

ஆரம்ப நேரம் : 12.50P.M

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனது தந்தை கிருஷ்ணமூர்த்திக்கும், தாய் பாக்கியம்மாளுக்கும் நானும், பிரதிவாதி மற்றும் எங்கள் மூத்த சகோதரர் ஆதி நாராயணன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களும், தலைவாசலில் உள்ள ச.எண்.85/2B-ல் உள்ள வீட்டு மனைகளும் எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான்.

2. தாவா சொத்துக்கள் மற்றும் தலைவாசலில் உள்ள சொத்துக்கள் குறித்து கடந்த 1989-ஆம் ஆண்டு எனது பெற்றோர்களும், நாங்களும் சேர்ந்து பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திர எண். 763/1989 என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் கூறப்பட்டுள்ள D அட்டவணை சொத்துதான் இந்த தாவாவில் A அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. எங்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படி தாவா B அட்டவணை சொத்தை எனது பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் வரை அனுபவித்து கொள்வது என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பெற்றோர் இறந்த பின்னிட்டு அவர்கள் வசித்து வந்த வீடு அழிந்து போய் காலி மனையாக உள்ளது என்றால் சரியல்ல, அந்த வீட்டை சரிசெய்ய ஏற்பாடு செய்தபொழுது பிரதிவாதி தடுத்து விட்டார். நான் அனுபவம் செய்து வரும் வீடும் பிரதிவாதியின் வீடும் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று தாவாவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

4. கடந்த 1989-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட D அட்டவணை சொத்தை 1990-ல் தலைவாசல் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.136/1990-ன் படி பரிவர்த்தனை செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் பரிவர்த்தனை செய்து கொடுத்த வீட்டு மனையின் நீளம், அகலம் 510 சதுர அடி ஆகும். அவ்வாறு பரிவர்த்தனை செய்து கொடுத்த வீட்டு மனையில் பிரதிவாதிதான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான்.

5. கடந்த 1989-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட D அட்டவணை சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லைகளைதான் நான் பரிவர்த்தனை செய்து கொடுத்த ஆவணத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது தாவாவில் சொத்து விவரத்தில் 1-ஆம் அயிட்ட சொத்திற்கு எந்த நான்கெல்லைகளும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் எனது முதல்நிலை சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் 1-ஆம் அயிட்ட சொத்திற்கு தென்புறத்தில் உள்ள C அட்டவணை சொத்தை பிரதிவாதிகள் அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

6. கடந்த 1990-ஆம் ஆண்டு எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை பிரதிவாதிக்கு பரிவர்த்தனை செய்து கொடுத்த பின்னர் தற்பொழுது அந்த சொத்திற்காக வழக்கு

தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு பரிவர்த்தனை செய்து கொடுத்த சொத்தை சரிசெய்ய முயற்சித்தபொழுதுதான் பிரதிவாதி தடுத்தார் என்றாலும், அதற்காகத்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

7. தாவா C அட்டவணை சொத்தானது பிரதிவாதியின் மனைவியான யசோதா பெயரில் உள்ளது என்றால் நான் பிரதிவாதி பெரியசாமிக்குதான் எழுதிக் கொடுத்தேன். நான் பரிவர்த்தனை செய்து கொடுத்த தாவா A அட்டவணை சொத்தில் பிரதிவாதி கடந்த 20 ஆண்டுகளாக அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். அவ்வாறு பிரதிவாதி அனுபவத்தில் இருந்த சொத்தில் கடந்த 16.05.2019 அன்று நான் அத்துமீறி நுழைந்து பிரச்சனை செய்தேன் என்றாலும், அது குறித்து பிரதிவாதி வீரகனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும் சரியல்ல, நான் வீடு கட்ட ஆரம்பித்தபொழுது பிரதிவாதி தடுத்தார், அதற்காக நான்தான் புகார் கொடுத்தேன். நான் சொல்வது தவறு என்றாலும், பிரதிவாதிதான் என் மீது புகார் கொடுத்து மனு ரசீது பெற்றுள்ளார் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.10 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.88/2019, Dt.04.03.2026.